# உதயன்

விலை ரூபா 4.50

அடர்: 6 பிரசோற்பத்தி ஞூ வைகாசி மீ 10 உ வெள்ளிக்கிழமை [24—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 171


# காங்கிரஸ் தலைமைப் பதவி யாருக்கு என்பதில் இழுபறி!

## இறுதிக் கிரியைகள் இன்று

புதுடில்லி, மே 24

கொலையுண்ட ராஜீவ் காந்தியின் தகனக்கிரியைகள் இன்று மாலை 4 மணியளவில் முழு இராணுவ மரியாதைகளுடன் புதுடில்லி - சக்திதானிலுள்ள ஜமுனா ஆற்றுப் படித்துறையில் நடைபெறும்.

ராஜீவ் காந்தியின் பூதவுடலுக்கு அவரது ஒரே மகன் ராகுல் காந்தி தீ மூட்டுவார்.

லட்சக்கணக்கான மக்கள் இறுதிக்கிரியை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-எ-த]

## தீன்மூர்த்தி பவனில் ரகளை!

ராஜீவ் காந்திக்கு இறுதி அஞ்சலி செலுத்த புதுடில்லி தீன்மூர்த்தி பவனுக்கு நேற்று வந்த மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

மக்கள் கட்டம் கட்டுக் கடங்காமல் போகவே, பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுப்பிரயோகமும், குண்டாந்தடிப் பிரயோகமும் செய்தனர். அதனைத் தொடர்ந்தே மோதல்கள் இடம்பெற்றன. [உ-த]

## தனது பாதுகாப்புக் குறித்து ராஜீவ் கடைசியாக கூறியது

புதுடில்லி, மே 24

படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் ராஜீவ் காந்தி நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கே பேட்டி அளித்தார்.

ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று கொண்டிருந்த காரில் 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தியாளர் பார்பரா குரொஸ் என்பவரும் சென்றார்.

அப்போதே ராஜீவ் காந்தியுடனான பேட்டி இடம்பெற்றது.

அப் பேட்டியில் "போதிய பாதுகாப்பு இன்றி இப்படிப் போகிறீர்களே!" என்று செய்தியாளர் கேட்டதற்கு—

"ராஜீவ் — பிரதமராக இருந்தபோது பாதுகாப்பு வழங்கப்பட்டது. பிரதமராக வருவதற்கு முன்னர் இருந்த பாதுகாப்பு நிலை தான் இப்போது எனக்கு ஏற்பட்டுள்ளது" — என்று பதிலளித்தார். [ஒ-எ]

## ராஜீவின் குடும்பத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

புதுடில்லி, மே 24

ராஜீவ் காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து, அவரின் குடும்பத்துக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ராஜீவின் புதல்வர் ராகுல் அமெரிக்காவிலிருந்து நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார். உடனடியாக தீன்மூர்த்தி பவனுக்குச் சென்ற ராகுல், தந்தைக்கு கண்ணீர் சொரிய தமது அஞ்சலியைச் செலுத்தினார்.

பூதவுடலுக்கு அருகே அவரது நெருங்கிய குடும்பத்தினர் சோகமே உருவாக அமர்ந்திருந்தனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தேசிய அரசு அமைக்க இந்திய ஜனாதிபதி முயற்சி

புதுடில்லி, மே 24

ராஜீவ் காந்தி கொலையுண்டதை அடுத்து தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி வெங்கட்ராமன் ஈடுபட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து அவர்களுடன் இது தொடர்பாக ஜனாதிபதி நேற்று பேச்சுகள் நடத்தினார் என்று கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி நீலம் சஞ்சீவரெட்டியும் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து இதுகுறித்து பேசினார் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-எ]

## பல கட்சிகள் நிராகரிப்பு

தேசிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனையை தேசிய முன்னணி, இந்திரா காங்கிரஸ், இடதுசாரி கம்யூனிஸ்ட், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் ஆகியன நிராகரித்துவிட்டன.

ஆனால் மற்றைய கட்சிகள் இந்த யோசனையை ஏற்பின், தமது கட்சியும் அதனைப் பரிசீலனை செய்யும் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. மல்கானி சொன்னார். [உ-எ]

## சோனியா காந்தி ஏற்க மறுப்பு

புதுடில்லி, மே 24

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்பதற்கு ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியா காந்தி மறுத்துவிட்டார்.

இதனையடுத்து கட்சியின் தலைவரைத் தெரிவு செய்யும் விடயத்தில் கட்சிக்குள் பெரும் இழுபறி நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தலைமைப் பதவியை ஏற்க மறுக்கும் அறிவிப்பை திருமதி சோனியா காந்தி நேற்று அறிக்கை ஒன்றின் மூலம் விடுத்தார்.

தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் ஏற்பட்டுள்ள துக்ககரமான நிகழ்ச்சி கட்சித் தலைமைப் பதவியை ஏற்பதற்கு இடமளிக்கவில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

ராஜீவ் காந்தியின் இறுதிக் கிரியைகள் முடிவடைந்த பின்னர் கட்சித் தலைமைப் பதவியை ஏற்கும்படி திருமதி சோனியா காந்தியை கட்சியின் தலைவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வர் என்று கட்சியின் பேச்சாளர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

வற்புறுத்தப்பட்டாலும் சோனியா காந்தி இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்றே அரசியல் அவதானிகள் கருத்து வெளி

[3 ஆம் பக்கம் பார்க்க!

## கட்டுவனில் கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 23

நேற்று முன்தினம் பிற்பகல் 3-30 மணியளவில் கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் எதும் கிடைக்கவில்லை. [உ]

## சி. ஐ. டி பொறுப்பதிகாரி சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 24

கடந்த திங்களன்று இரவு 10 மணியளவில் மட்டக்களப்பு சி ஐ டி பொறுப்பதிகாரியும் அவரது மெய்ப் பாதுகாவலர் இருவரும் தாண்டவன்வெளி என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். [உ]

## முச்சந்தி முரளி



சோனியா ஏலாது என்டா [illegible] கேட்கிறது தானே......!

## நொச்சிமோட்டையில் ஷெல்லுக்கு ஒருவர் தலை சிதறிப் பலியானார்!

### இரண்டு பேரின் கால்கள் துண்டிப்பு

யாழ்ப்பாணம், மே 24

வவுனியா-பேயாடி கூழாங்குளத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 6-15 மணியளவில் நொச்சிமோட்டைப் பகுதியை நோக்கி திடீரென கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பாலத்தடியில் விழுந்த ஷெல்லுக்கு இலக்காகி பயணி ஒருவர் தலை சிதறிப் பலியானார். மற்றும் ஐவர் படுகாயமடைந்தனர். அவர்களில் இருவர் தமது கால்களை இழந்துவிட்டனர்.

மடுவைச் சேர்ந்த குகன் [ராஜா-24 வயது] என்பவரே இச்சம்பவத்தில் பலியானவர் ஆவார்.

செட்டிகுளத்தில் இருந்து இடம் பெயர்ந்தவரான ஐயாத்துரை நந்தகுமார் [22 வயது] இடது காலையும், சுழிபுரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கதிர்காமநாதன் [26 வயது] வலது காலையும் இழந்து விட்டனர்.

மாணிக்கம் மாணிக்கராசா [34 வயது - வவுனியா], செல்லத்துரை வசந்தகுமார் [17 வயது - அச்சுவேலி], செல்வன் [செட்டிகுளம்] ஆகியோரே காயமடைந்த ஏனைய மூவரும் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியிலும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப் பட்டுள்ளனர். [ஒ-15-8]

## கொக்குத்தொடுவாயில் அவ்ரோ குண்டு வீச்சு!

மணலாறு முந்திரிகைக் குளம் முகாமிலிருந்து கொக்குத்தொடுவாய்ப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 4 45 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் காலை 6.30 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று இப் பகுதியில் ஆறு பீப்பாய்க் குண்டுகளை வீசியது.

இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ]

## திங்கள் முதல் 3 நாட்களுக்கு தாக்குதல் நிறுத்தமாம்!

### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, மே 24

வெசாக் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் [திங்கள் அதிகாலை முதல்] புதன்கிழமை நள்ளிரவு வரை மூன்று நாட்களுக்குத் தாக்குதல் நடவடிக்கைகளை தனது இராணுவம் நிறுத்தி வைக்கும் என்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கிறது.

மகா சங்கத்தினரதும், பௌத்த நிறுவனங்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்தே அவர் இப்படிச் சொன்னார்.

"தாக்குதல் நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினால், நாமும் பதில் தாக்குதல் நடத்துவோம்" என்றும் அவர் சொன்னார்.

## ஈழத் தமிழர் 50 பேர் கைது!

சென்னை, மே 24

சென்னை திருவான்மியூர் அருகே நேற்று பொலிஸார் சோதனை நடத்தி சுமார் 50 இலங்கைப் போராளிகளைக் கைது செய்தனர். [உ]

## ஸ்ரீலங்காவில் துக்க தினம் அனுஷ்டிப்பு

கொழும்பு, மே 24

ராஜீவ் காந்தியின் மறைவு குறித்து இன்று துக்க தினம் அனுஷ்டிப்பது என்று இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி அரசு அலுவலகங்களில் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இதேசமயம் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக தமிழகத்தில் தற்சமயம் நடைபெற்றுவரும் விசாரணைகளுக்கு இலங்கை அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ-8]

## தொண்டாவும் பங்குபற்றுவர்

கொழும்பு, மே 24

அமைச்சர் தொண்டமானும் புதுடில்லியில் நடைபெறும் ராஜீவ் காந்தியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வார்.

சோவியத் உப ஜனாதிபதி திரு. யனயேவும், கனடா வெளியுறவு அமைச்சர் திருமதி பார்பரா, ஜப்பானிய பிரதமர் திரு. கைபூ ஆகியோரும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்கின்றனர்.

## பரீட்சை ஆரம்பம்

தடைப்பட்டிருந்த ஜி.சீ.ஈ. உயர்தர விசேட பரீட்சை நேற்று மீண்டும் ஆரம்பமானது. எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும்.

பரீட்சை நிலையங்களாக உள்ள பாடசாலைகள் தவிர, ஏனைய பாடசாலைகள் வழமைபோல இயங்கின. [ஒ-8-5]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 24

நேற்று மணலாறுப் பகுதியில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான நிசன் [மயில்வாகனம் ராஜா - அக்கரைப்பற்று], மன்சூர் [காத்தமுத்து ஜெகதீசன் - வாழைச்சேனை] ஆகிய இருவரும் வீரமரணம் அடைந்தனர். [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

யாழ்நகர் 560, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையத்தில் கடமையாற்ற ஒரு பெண் தாதி தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: டாக்டர் வே. யோகநாதன் 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். காலை 9 முதல், 12 மணி வரை. [4094]

## ஜோதிடம்

கல்வி, விவாகம், தொழில் ஆகியவற்றிற்குரிய தடைகள் அதற்கான காரணங்களும், சாந்தி பரிகாரங்களும் கூறப்படும். வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படும். நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீமான்வ விநாயகர் சோதிட நிலையம் 146, [403] பருத்தித்துறை ரோட், அரசடிச் சந்தி நல்லூர் [16879]

## பயிற்சி வகுப்பு

வாழைநார் மூலம் அலங்கார பொருள்கள் செய்தல் தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. பயிற்சி பெற விரும்புவோர் 25-5-91 சனிக்கிழமையும் 26-5-91 ஞாயிற்றுக்கிழமையும் 3 மணி தொடக்கம், 6 மணி வரை நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். லெப்டினன்ட் சேனை நியாசி நிலையம் நூலகம், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் [1687]

## WIN INN LADIES ACADEMY

வாழைநார் கைப்பணி பயிற்சி வகுப்புகள் 1 - 6 - 91 முதல் ஆரம்பமாகவுள்ளது. முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பங்கள் வரவேற்கப்படும். காலை 9 00— 12 00 வரை 61/1 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி [16887]

## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

குளியலறை மலசலகூட தரைகளில் படிந்துள்ள கறைகளை அகற்றி பளிச்சிடும் வெண்மை பெற மில்க்வைற் திரவசவர்க்காரம் ஒரு போத்தல் ரூ 45/- மட்டுமே எங்கும் விற்பனையாகிறது மில்க்வைற். [சி 5084]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

கரவெட்டி
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 26 - 05 - 1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 30 மணிக்கு கரவெட்டி கரவெட்டி விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
73, கண்டிரோட்,
யாழ்ப்பாணம். [சி/5093]

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 24
மாவட்ட மூதாளர் மத்திய நிலைய திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இராசசுந்தரலிங்கம் இதனை ஆரம்பித்து வைப்பார். [இ]

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே 24
சரவணாய் அருள்மிகு உச்சித்தி புவனேஸ்வரி அம்பாள் கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது. [இ-5]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

நல்லூர்
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 27-05 91 திங்கட்கிழமை பி. ப. 3 00 மணிக்கு கா/ சொக்கவின் இந்துக் கல்லூரியில் நடைபெறும். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.
73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம். [C/5096]

# நாகலிங்கம் கல்வி நிலையம்

திருநெல்வேலி

## G. C. E. (A/L) - 92 Batch

தூய - பிரயோக கணிதம் — திரு. குணசிங்கம் B.Sc

ஆரம்பம்: சனி 25 - 05 - 91 (2 15P. m)

பௌதிகவியல் - திரு. N. பத்மநாதன் B.Sc., (Hons)
பொறியியல் (புதன், வியாழன் 4-30 P. m)
[ஆரம்பம்: 30 - 05 - 91 வியாழன்]
[4096]

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
21 - 06 - 1964

விண்ணில்:
14 - 05 - 1989

திதி:
24 - 05 - 1991

## அமரர் மயில்வாகனம் ஸ்ரீகுமார்

(மாசிலாஸ்)

சீர் கொண்டு சிறந்தோங்க உழைத்தவன் தன்னை கூர்வாள் கொண்டு அறுத்ததை நெஞ்சம் மறக்குமோ!

பிரிவால் வாடும்;
பிள்ளைகள், பெற்றோர்கள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

முயிலிட்டி,
வல்வெட்டித்துறை.
[4093]

# அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

## A/L 91

மாணவர்களுக்கான 2½ மாத பிரத்தியேக

## துரித மீட்டல் வகுப்புகள்

(நீண்ட கால அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை)

**ஆரம்பம்: 25-05-1991** காலை 9 மணி

- ✶ பொருளியல் — திரு. லோகநாதன்
- ★ கணக்கியல் — திரு மரியதாஸ்
- ★ வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
- ✶ அளவையியல் — திரு. யுகபாலசிங்கம்
- ✶ தமிழ்/ இந்துநாகரிகம் — திரு. சொக்கன்
- ✶ அரசியல் — திரு. சிலன்
- ✶ புவியியல் — திரு. சண்

★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்
★ அச்சடித்த வினா-விடைப் பயிற்சிகள்

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஓர் அரிய வாய்ப்பு!

விவரங்களுக்கு: நேரில்

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]
[இ/0009]

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மாணிக்கம் சுப்பிரமணியம்
(இலாக்கர்)

தோற்றம்: 26 - 11 1910
மறைவு: 03 - 06 - 1990
திதி: 24 - 05 1991

★

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## நாகம்மா சுப்பிரமணியம்

தோற்றம் 19 10 1920
மறைவு: 27-04 1985
திதி: 22 - 04 - 1991

அன்புள்ள அப்பாவே! ஆண்டொன்று சென்றாலும் மறப்போமா உங்களை! அன்பின் உறைவிடமே அம்மா! ஆண்டு ஆறு கடந்தாலும் உங்களை பிரிந்த கவலை ஆறவில்லை;

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்;

மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், மைத்துனர், உற்றார், உறவினர்கள்,

சுந்தரோடை, சுன்னாகம். (சி-5080)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சே. ஆ. கந்தசாமி [இராசு]

மலர்வு: 27-3-1939
உதிர்வு: 14-6-1989

திதி வைகாசி சுக்கிலபக்ஷ ஏகாதசி

ஓ ... அதற்குள் ஆண்டிரண்டாகியது
ஐயகோ அச்செய்தி
நெஞ்சைப் பிளந்து எமது நிலைகையும் மாற்றியது
மறக்க வொண்ணா வதனமே
சிறக்கப் போன இடத்தில் உமக்கொரு
சேராவினை சேர்ந்ததுமேன்?
உற்சவம் உவட்டு என்பதாலோ
உமது திதியும் இன்றாகியது?
தொண்டு செய் உமது சரமதே இன்று
தொழுது கொண்டே நிற்கிறது
ஆறவொண்ணா நெஞ்சங்கள் விழிநீரெனும்
அக்கினிப் பூக்களை உம்
சீரடியில் சிந்தி நிற்கும்

உங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்காக உற்சவநாயகி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை வேண்டுகிறோம்.

மனைவி - பொற்கொடி கந்தசாமி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு.
யாழ்ப்பாணம். [16888]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ஸ்கந்தவரோதய கல்லூரி, சுன்னாகம்

## பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1991-06-30 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பிரேரணைகள் ஏதும் இருப்பின் 1991-06-08 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் அறிவிக்கவும். அத்துடன் அங்கத்தவர்கள் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளும் படியும், புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்கள் கடிதமூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்.

செயலர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி,
சுன்னாகம்.

[இ/0014]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 26-05-91 பி. ப. 3 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்கு கொள்ளும்படி அழைக்கிறோம். புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
[இ/5092]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பொன்னையா சுந்தரம்

தோற்றம்: 1-9-1934 மறைவு: 10-4-1991

அன்பு, பண்பு, பாசம் என்ற நற்குணங்களிலும் சிறந்து வாழ்ந்த அருட்பெரும் ஜோதியில் 10-4-1991 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! அன்பெனும் புனித உள்ளம் தந்தையோர் பாச வெள்ளம் என்பதை உணர வைத்து மண்ணிலே உயர வாழவைத்த குணக்குன்றின் ஒளிப்பிழம்பே நீங்கள் மறைந்து 45 நாட்கள் சென்றாலும் ஆறாது எங்கள் துயர். உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சில் அழியாக் கோலங்கள்; உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இன்றும் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருகர்
பேரப்பிள்ளைகள்.

கோகுல வீதி,
கொண்டாவில் வடக்கு.
[16877]

ராஜீவ் கொலையுண்ட

# ஸ்ரீபெரும்புதூருக்கு கூடுதல் துருப்புகள்

சென்னை, மே 24

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீபெரும்புதூருக்கு கூடுதல் துருப்புகளை மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது.

அங்கு பதற்றம் நிலவியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழ் நாட்டில் நேற்றும் பரவலாக வன்செயல்கள் இடம்பெற்றன.

அவற்றில் சில வருமாறு:-

★ சென்னை நகரில் பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது கும்பல் ஒன்று தாக்க முயற்சித்தது. அப்போது பொலீஸார் கண்ணீர்க்குண்டு பிரயோகம் செய்து கும்பலைக் கலைத்தனர்.

★ சென்னை, புளியந்தோப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த இரண்டு பொலீஸார் தாக்கப்பட்டனர்.

★ சேலம் நகரில் நேற்றுக் காலை இரண்டு கட்சிகளின் தொண்டர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்தனர்.

★ சென்னை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [ரு-எ]

காசுக்கட்டளை, தபாற்கட்டளை

## காலம் கடந்தவற்றை மாற்றுவதற்கு வசதி

யாழ்ப்பாணம், மே 24

ஆறுமாத காலம் கடந்து காலாவதியான உள்ளூர் காசுக்கட்டளை மேலதிக கட்டணம் எதுவும் அறவிடாது இவ்வாண்டு இறுதிவரை யாழ் மாவட்ட தபாலகங்களில் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காசுக் கட்டளைக் கட்டுப்பாட்டாளரால் இந்த அனுமதி யாழ்-பிரதேச அஞ்சல் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெளிநாட்டுக் காசுக் கட்டளை, பிரித்தானிய தபாற்கட்டளை, காசுக் கட்டளை போன்றவற்றுக்கு கட்டுப்பாட்டாளரின் அனுமதி பெற்றுக் கொடுப்பனவு வழங்கவும் தபாலகங்களில் ஏற்பாடாகியுள்ளது.

காலம் கடந்த காசுக்கட்டளை மற்றும் தபாற் கட்டளைகளை வைத்திருப்போரை இம்மாதம் 29 ஆம் திகதிக்கு பின்னர் தங்கள் பகுதித் தபாலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்-பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் திரு எஸ். சடாட்சரநாதன் அறிவித்துள்ளார். [அ-3]

### சடலம் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, மே 24

கோரதீவு துறையில் மாரடைப்பால் மரணமான அடையாளம் காணப்படாத ஒருவரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இறந்தவரிடம் இளிநொச்சி தெங்கு வளம் பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் —இளை முகாமையாளராகக் கடமையாற்றும் மா. முருகேசு [கரவெட்டி கிழக்கு] என்பவருக்குரிய விடுமுறை விண்ணப்பப் படிவம் ஒன்று இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-117]

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 24

கனுவசஞ்சிக்குடி ராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து கடந்த ஞாயிறன்று கனுவாஞ்சிக்குடியில் பொரியதம்பி மாணிக்கம் [வயது 40] என்ற கனுதரவனை வரலிலைக் கைதுசெய்து முகாமுக்கு கொண்டு சென்று அங்கு வைத்துச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகம்

கொக்குவில் கிழக்கு கோணமலை வீதியைச் சேர்ந்த கந்தையா சண்முகம் 23-5-1991 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், ஸ்ரீபத்மநாதன் [சுண்டிக்குளி], ந. இராஜபூபதி, மா. பத்மலோஜினி (U K), ந நாகலட்சுமி (Lanka Salu Sala கணக்காய்வாளர். கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரம்சோதி, M. T நடராஜா. K மாணிக்கவாசகர் [கைத்தொழில் பொறியியலாளர்] C. நந்தகுமார் [நீயணைக்கும் படை பிரிவு, கொழும்பு] ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீதயாளன் [கனடா]. ஸ்ரீசுமதி [பேராதனை பல் வைத்தியத் துறை], சகாதேவன் [ஜேர்மனி], சஞ்சீவன் [நோர்வே]. சத்தியசீலன், கௌதமி, தெய்வசித்தி, ஜெயபாலன் [லண்டன்]. திருமதி ஜெயந்தினி சிவானந்தசுந்தரம் [லண்டன்], ஜெயவாணி, ஜெயறாம் [ஜேர்மனி]. ஜெயசங்கர், ஜெயந்தா [வேம்படி மகளிர் கல்லூரி], ஜனகன் [லண்டன்], நிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், பிரீதிக்கின் அன்புப் பூட்டனும், சோதிப்பிள்ளை, மயில்வாகனம் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
M. T. நடராஜா
சு. ஸ்ரீபத்மநாதன்

[இ-5097]

# குண்டுடன் சென்ற பெண்; அடையாளம் காண முயற்சி;

ராஜீவ் உயிரிழக்கக் காரணமாக இருந்த குண்டை வெடிக்கவைத்ததாகக் கருதப்படும் பெண்ணைக் கண்டுபிடிப்பதில் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு வெகு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இப் பெண்ணின் தலை மற்றும் கைகள் குண்டுவெடிப்பினால் உடலிலிருந்து பிய்த்தெறியப்பட்டுள்ளன.

எனினும் தலை பெரிதும் சேதமடையவில்லை என்றும் —

அந்தப் பெண்ணின் முகத்தின் புகைப்படம் எடுக்கப்பட்டு அவை தமிழகத்தில் பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் —

இதன் மூலம் அந்தப் பெண்ணை அடையாளம் காண முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று இந்திய மத்திய சட்டத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமியும் குற்றஞ்சுமத்தியிருக்கிறார். [உ.த]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வம் முருகேசு

[கொட்டடி]

கொட்டடியைச் சேர்ந்த திருமதி செல்வம் முருகேசு அவர்கள் 23-5-1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் திரு. முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், திரு. செல்வரத்தினம் [இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் Anz Grindlays Bank, Colombo], திரு சுப்பிரமணியம் [U K.], திரு. சுதிர்காமநாதன் [பத்மா நகைமாளிகை கொழும்பு] திரு நவரட்ணராஜா [U K], திரு பஞ்சலிங்கம் [Saudi Arabia] திருமதி சிறீரகேஸ்வரி ராஜாராம் [Canada, திரு பத்மநாதன் [Commercial. Company. Colombo] திரு கணேசநாதன் [U K] திரு வரதராஜா [பாரத் ரேடர்ஸ். யாழ்ப்பாணம்] ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற S. S. பொன்னுத்துரை, திருமதி சரஸ்வதி சபாபதிப்பிள்ளை அவர்களின் சகோதரரும், திருமதி கோமலாம்பாள், ஜானகி, ருக்மணிதேவி, ராணி, ராஜேஸ்வரி, திரு. ராஜாராம், திருமதி லோகினி, வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிதரன், கீதா, சஞ்சீவ், அனுஷ்கா, சதீசன் பிரதீப், கல்பனா, சோபனா, டினேஸ்குமார், ராஜி ரசனை பிரசாந்தன், வாகீசன் ஆகியோரின் பாட்டியும், திரு S. K பாலசிங்கத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-5-91 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இல: 73/1 A, பலாலி வீதி, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மு. செல்வரெத்தினம். [மகன்]

73/1 A. பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[16892]

### சதாசிவம் கந்தையா

[பரராஜசிங்கம்]

சுதுமலை தெற்கு எச்சாட்டியைச் சேர்ந்த சதாசிவம் கந்தையா 23-5-91 இல் காலமாகிவிட்டார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், இராஜமனோகரன் [லண்டன்], கலாவதி, பவானி, இந்திராணி, தேவகி [ஜேர்மனி], பத்மாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சகிலா [லண்டன்], பொன்னம்பலம், சந்திரசேகரன், தர்மராஜலிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், சிவகாமி, அபிராமி, சஞ்சீவன், கார்த்திகா, ரஜீவ், கௌசிகன், சியாமளன், கௌசி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 24-05-91 வெள்ளிக்கிழமை 12-00 மணியளவில் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி க. மனோன்மணி

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
[16893]

### பெரியசாமி புவனேந்திரன்

[உழவுயந்திர சாரதி]

மன்னார் உயிலங்குளம், வட்டுப்பித்தான்மடுவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட பெரியசாமி புவனேந்திரன் 23-5-91 இல் அகாலமரணமானார்.

பெரியசாமி - இராசமணி தம்பதிகளின் புதல்வனும், செல்லத்துரை - குணமணி தம்பதிகளின் மருமகனும், அமலநாயகியின் [கமலா] கணவனும், யோகநிதி, சதீஸ்வரன், ரமேஸ்வரன், ரவீந்திரன், ஜெயநிதி, ஜெயமதி ஆகியோரின் தந்தையும், இராசகுமார், இந்திராணி, காலஞ்சென்ற சந்திரா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-5-91) பகல் இரண்டு மணிக்கு கோரதீவு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. செல்வன்

[16746]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org